டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 6.8.2024 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 041 - Madurai | Online Edition

# பசுமை மண்டலங்களை மேம்படுத்த மத்திய அரசு நிதி

புது தில்லி, ஆக.5

நகர்ப்புறங்களில் பசுமை மண்டலங்களை மேம்படுத்தும் மாநிலங்களின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க நகர்ப்புற வனத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதி வழங்குகிறது. மாநகராட்சி, நகராட்சி மன்றங்கள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நகரங்களில் குடியிருப்பவர்களுக்கு முழுமையான ஆரோக்கியமான வாழ்க்கைச் சூழலை வழங்குவதற்காக 1000 நகர்ப்புற வன மண்டலங்களை உருவாக்கவும், அதன் மூலம்




தூய்மையான, பசுமையான, ஆரோக்கியமான மற்றும் நிலையான நகரங்களின் வளர்ச்சிக்கு பங்களிக்கவும் நகர்ப்புற வனத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற வனம், வனப்பகுதி இழப்பீட்டு நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடுதல் ஆணைய நிதியால் ஆதரிக்கப்படுகிறது.

**நகர்ப்புற வனத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

நகர்ப்புற அமைப்பில் பசுமையான இடம் மற்றும் அழகியல் சூழலை உருவாக்குதல்.

தாவரங்கள் மற்றும் பல்லுயிர் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் சுற்றுச்சூழல் மேற்பார்வையை வளர்த்தல்.

பிராந்தியத்தின் முக்கியமான தாவரங்களின் இருப்பிட பாதுகாப்பை எளிதாக்குதல்.

மாசு தணிப்பு, தூய்மையான காற்று, இரைச்சல் குறைப்பு, நீர் அறுவடை மற்றும் வெப்ப தீவுகள் விளைவு மூலம் நகரங்களின் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கு பங்களிப்பு.

நகரத்தில் வசிப்பவர்களுக்கு சுகாதார நன்மைகளை நீட்டித்தல் மற்றும் நகரங்களுக்கு காலநிலை நெகிழ்ச்சியாக உதவுதல்.

வனம் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்காக, 1980, இந்திய வனச் சட்டம், 1927, வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் 1972 மற்றும் பிற மத்திய, மாநில சட்டங்கள் உட்பட பல்வேறு சட்டங்கள் அந்தந்த மாநில அரசு, யூனியன் பிரதேச நிர்வாகத்தால் செயல்படுத்தப்படுகின்றன.

இத்தகவலை நேற்று மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் தெரிவித்தார்.

# டிரோன் மூலம் மருந்து தெளிக்கும் செயல்விளக்கம்



விழுப்புரம், ஆக.5

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் வட்டாரம் வீராணம் கிராமத்தில் கண்டமங்கலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் மூலம் டிரோன் மூலம் மருந்து தெளிக்கும் செயல் விளக்கம் கருடா ஏரோ டிரோன் கம்பெனியாரால் நடத்தப்பட்டது. இந்த செயல் விளக்கத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) அ.சீனுவாசன், நேசனல் அக்ரோ பவுண்டேசன் ராஜசேகர், உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தைச் சேர்ந்த செயலாளர் வெங்கடேசன், பொருளாளர் தண்டபாணி, இயக்குநர் பாலசுப்ரமணி, கொத்தாம்பாக்கத்தைச் சேர்ந்த கண்ணன் மற்றும் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த உர மேலாண்மை விவசாயிகள் பயிற்சி



சிவகங்கை, ஆக.5

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டாரம் வேளாண்மைத் துறையின் மூலம் அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கான உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த உர மேலாண்மை என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு வேதியரேந்தல் கிராமத்தில் பயிற்சி அளிக்கப் பட்டது.

இப்பயிற்சிக்கு மானாமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் ஜா.இரவிசங்கர் பயிற்சியினை தொடங்கி வைத்து வரவேற்புரை வழங்கினார். சேதுபாஸ்கர வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய உதவிபேராசிரியர் முனைவர் கனிமொழி, சமச்சீர் உரமிடல் மற்றும் இரசாயன உரங்களின் பயன் பாட்டினை குறைத்து பயன்படுத்தும் உத்திகள் பற்றிய தொழில் நுட்பகளை எடுத்துக்கூறினார்.

மானாமதுரை துணை வேளாண்மை அலுவலர் நா.சப்பாணி முத்து, நடப்பு நிதியாண்டில் வேளாண்மைத்துறையில் செயல் படுத்தப்படும் மானிய திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.அமிர்தலட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் திவ்யா, வினோத்குமார் செய்திருந்தனர். உதவி வேளாண்மை அலுவலர் சே.அனுசுயாதேவி அனைவருக்கும் நன்றி கூறினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# காரீப் பருவ பயிர்களுக்கு காப்பீடு செய்ய அழைப்பு

கிருஷ்ணகிரி, ஆக.5

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் 2024-25 காரீப் பருவ பயிர்களான ராகி, துவரை மற்றும் நிலக்கடலை-க்கு காப்பீடு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பயிரைக் காப்பீடு செய்ய ஆகஸ்ட் 16-ம் தேதி கடைசி நாளாகும்.

இது தொடர்பாக தளி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.முருகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தளி வட்டாரத்தில் காரீப் பருவ சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது. இந்நிலையில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டு 2024-25 காரீப் பருவத்திற்கான ராகி, துவரை மற்றும் நிலக்கடலை ஆகிய பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் காப்பீடு செய்யலாம். அறிவிக்கப்பட்ட பயிர்களில் குத்தகையில் சாகுபடி செய்யும் விவசாயிகளும் பயன் பெற தகுதியானவர்கள் ஆவர். விவசாயிகள் உட்படஅனைத்து பயிர் கடன் பெறும் விவசாயிகளும் இதில் சேர்த்து கொள்ளப்படுவர். விதைப்பு தவிர்த்தல், விதைப்பு தோல்வியுறுதல், பயிரிட அபாயம் ஏற்படும் சூழ்நிலையில், விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள பயிர் காலத்தில் பயிர் இழப்பு அறுவடை வரை உள்ள பயிர் காலத்தில் பயிர் இழப்பு அறுவடைக்கு பின் ஏற்படும் மகசூல் இழப்பு, புயல், ஆழங்கட்டி மழை, மண் சரிவு, வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளில் ஏற்படும் பயிர் இழப்பு ஆகியவற்றிற்கு காப்பீடு வழங்கப்படுகிறது. பயிர் காப்பீடு செய்ய முன்மொழிவு படிவம், சிட்டா, அடங்கல் அல்லது பயிர் சாகுபடி சான்று, ஆதார் அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தக முன் பக்க நகல் ஆகிய ஆவணங்கள் தேவைப்படுகிறது. மேலும் பயிர் காப்பீடு தொகை, பிரீமியம் தொகை மற்றும் காலக்கெடு குறித்து விவரம் தெரிவிக் கப்பட்டுள்ளது. அதன்படி பிரீமியம் தொகை ராகி ரூ.228/-, துவரை ரூ.308/-, நிலக்கடலை ரூ.426/- ஆகும். ராகி, துவரை, நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு ஆகஸ்ட் 16-ம் தேதி வரை பயிர் காப்பீடு செய்ய காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, காரீப் பருவ பயிர்களை சாகுபடி செய்துள்ள தளி, கக்க தாசம், அந்தேவனப்பள்ளி, அஞ்செட்டி, உரிகம் பகுதி விவ சாயிகள் இத்திட்டத்தில் பெருமளவில் சேர்ந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 05.08.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 50 | 55 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 55 | 60 | 57 | உருளை (கோலார்) | 44 | 50 |
| 1B | கத்திரி(Nadu) | 65 | 68 | 57A | உருளை(ஊட்டி) | 75 | 85 |
| 2 | வெண்டை | 32 | 36 | 58 | மேரக்காய் | 28 | 32 |
| 3 | தக்காளி (நாடு) | 20 | 23 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 34 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 20 | 22 | 60 | கேரட் | 140 | 150 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 60 | 64 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 50 | 55 |
| 6 | புடலை | 40 | 46 | 62 | நூல்கோல் | 50 | 60 |
| 7 | பீர்க்கன் | 32 | 36 | 63 | டர்னிப் | 40 | 45 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 30 | 35 |
| 9 | பாகற்காய் | 58 | 60 | 65 | மு.கோஸ்(கலர்) | 40 | 45 |
| 10 | கொத்தவரை | 30 | 35 | 66 | காளிபிளவர் | 48 | 54 |
| 11 | பூசணி | 30 | 36 | 67 | பட்டாணி | | |
| 12 | அரசாணி | 25 | 28 | 68 | பூண்டு | 190 | 275 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 60 | 70 | 69 | இஞ்சி | 130 | 135 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 90 | 102 | 70 | புருக்கோலின் | 210 | 220 |
| 15 | சி.வெங்காயம் | 36 | 40 | 71 | பென்னி பீன்ஸ் | 55 | 60 |
| 16 | பெ.வெங்காயம் | 34 | 37 | 72 | குடமிளகாய் | 45 | 68 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 36 | 73 | ஊட்டி அவரை | | |
| 18 | பச்சை மொச்சை | 65 | 70 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 50 | 54 | 71A | | | |
| 20 | தேங்காய் | 30 | 33 | | | | |
| 21 | மாங்காய் | 0 | 0 | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 44 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 68 | 72 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 70 | 78 | 75 | எலுமிச்சை | 80 | 90 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா | 45 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 30 | 35 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 34 | 79 | மாதுளை | 150 | 200 |
| 29 | கொத்தமல்லி | 30 | 35 | 80 | திராட்சை | 110 | 120 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 15 | 18 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 15 | 18 | 83 | ஆரஞ்ச் | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 15 | 18 | 85 | அன்னாசி பழம் | 40 | 45 |
| 35 | சிறுகீரை | 15 | 18 | 86 | சீதாப்பழம் | 25 | 30 |
| 36 | பாலாக்கு | 15 | 18 | 87 | முலாம்பழம் | 35 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 15 | 18 | 88 | தர்பூசனி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | 30 | 32 |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 75 | 80 |
| 40 | கோவக்காய் | 42 | 48 | 91 | பூவன் | 45 | 52 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 48 | 52 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 54 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 30 | 34 | 95 | நாடன் | 40 | 45 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 58 | 62 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 35 | 38 | 97 | செவ்வாழை | 80 | 87 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 0 | 0 | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 65 | 70 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 75 | 85 |
| 52 | புளி | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 40 | 45 | 104 | நாவல் | 0 | 0 |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 30 | | | | |

# விதைபரிசோதனை செய்து விதைத்தால் அதிக லாபம் பெறலாம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சம்பா சாகுபடி செய்ய விவசாயிகள் அனைவரும் தங்கள் நிலத்தினை உழவு செய்து தயார் செய்து வருகின்றனர். இத்தருணத்தில் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான சம்பா விதைகளான சி.ஆர் 1009 சப் 1, சாவித்திரி (சி.ஆர் 1009) , ஏடிட 51, ஏடிட 52, வெள்ளை பொன்னி மற்றும் சொர்ணாசப் 1 விதைகள் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் விதை விற்பனை நிலையத்திலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் அனைவரும் சான்று பெற்ற நல்ல தரமான விதைகளையே பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். மேலும் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதை களையும் பயன் படுத்த உள்ளனர், அப்படி பயன்படுத்தும் பொழுது தங்களிடம் உள்ள விதைகள் நல்ல முளைப்புத்திறன் உள்ளதா என பரிசோதனை செய்து கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள விதை பரிசோதனை நிலையத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமாக 100 கிராம் விதையினை கொடுத்து, பரிசோதனை கட்டணமாக ரூ 80/- மட்டும் செலுத்தி முளைப்புத்திறன் பரிசோதனை செய்து கொள்ளலாம், அனுப்ப வேண்டிய முகவரி மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், 15,காளியம்மன் கோவில் தெரு, வெளிப்பாளையம், நாகப்பட்டினம் -611003.

எனவே சம்பா சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் அனைவரும் நெல் விதைகளை முளைப்புத்திறன் பரிசோதனை செய்து விதைப்பதன் மூலம் அதிக அளவில் மகசூல் பெற்று அதிக லாபம் பெறலாம் என நாகப்பட்டினத்திற்கான தஞ்சாவூர் சரக விதை பரிசோதனைஅலுவலர் து.சிவவீரபாண்டியன் மற்றும் நாகப்பட்டினம் விதை பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் செ.பிரசன்னா தெரிவித்துள்ளனர்.

# விவசாயிகளுக்கான இலவச காளான் வளர்ப்பு மற்றும் மதிப்புக்கூட்டல் பயிற்சி

இராமநாதபுரம், ஆக.5

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி பேரையூரை அடுத்துள்ள நம்மாழ்வார் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் விவசாயிகளுக்கான இலவச காளான் வளர்ப்பு மற்றும் மதிப்புக் கூட்டல் பயிற்சி நடைபெற்றது.





நான்காமாண்டு மாணவன் ஜோதிஷ்குமார் அனைவரையும் வரவேற்றார். கல்லூரியின் தலைவர் அகமது யாசின் தலைமை தாங்கினார். முதல்வர் பொறுப்பாளர் முனைவர் திருவேணி வாழ்த்துரை வழங்கினார். உதவி பேராசிரியர் தமிழ்ச்செல்வன் சிப்பிக் காளான் பற்றியும் அதன் இரகங்கள் மற்றும் குடில் அமைத்து அறுவடை செய்து சந்தைப்படுத்தும் தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கவுரை அளித்தார்.

இப்பயிற்சியில் உதவி பேராசிரியை ரஞ்சிதம் களான்களை பதப்படுத்தும் முறையான குறுகிய கால இருப்பு வைக்கும் முறை மற்றும் நீண்ட கால சேமிப்பு முறைகளை கற்றுக்கொடுத்தார். மேலும் காளான்களை உலர வைத்து பொடியாக்கி அதன் மதிப்பைக் கூட்டி அதிக லாபம் பெரும் வகையில் தயாரிக்கப்படக் கூடிய பொருட்களான காளான் சூப் மிக்ஸ், பிஸ்கட், நூடுல்ஸ் மற்றும் பாட்டிலில் உப்பில் ஊறவைக்கப்பட்ட காளான் மற்றும் ஊறுகாய் ஆகியவற்றைப் பற்றிய செய்முறை விளக்கமளித்தார். இப்பயிற்சியில் 35க்கும் மேற்பட்ட விவசாயிகள், உதவி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

பயிற்சியில் கலந்து கொண்ட அனைவரும் நம்மாழ்வார் வேளாண்மை மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியில் அமைத்துள்ள காளான் குடிலை பார்வையிட்டனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் அனுபவ வழி கற்றல் பாடப்பிரிவில் வணிக காளான் வளர்ப்பு பற்றி பயிலும் வேளாண் மாணவர் களான அபிராஜன், அபிசேக் கவியரசு, முத்துமுருகன், நவநீத கிருஷ்ணன், பவித்குமார், பிரேம்குமார், சாஹூல் அமித், சைலேந்திரன், சஞ்சய்குமார், சஞ்சய், சந்தோஷ், வேலன் ஆகியோருடன் விவசாயிகள் கலந்துரையாடி காளான் வளர்ப்பு மற்றும் மதிப்புக்கூட்டல் குறித்து தங்களுக்கு எழுந்த சந்தேகங்கள் மற்றும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். இறுதியாக, நான்காமாண்டு மாணவன் ரகுராம் நன்றியுரை யாற்றினார்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த மஞ்சள் ஒட்டும் பொறி வேளாண் கல்லூரி மாணவிகளின் செயல்விளக்கம்



தேனி, ஆக.5

திண்டுக்கல் காந்திகிராம பல்கலைக் கழகத்தில் இளங்கலை வேளாண்மை பட்டப்படிப்பு மாணவிகளான விஸ்வப் பிரியா, முத்து ஸ்ரீஅபிராமி விசாலினி, அப்ஸானா சஃப்ரீன் ஆகியோர், தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே உள்ள மார்க்கையன்கோட்டை என்ற கிராமத்தில் ஊரக வேளாண்மை அனுபவ திட்டத்தில் சேவை செய்து வருகின்றனர். மேலும் அக்கிராமத்தில் வசிக்கும் விவசாயிகளை சந்தித்து பாதிப்பை தரக்கூடிய சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த மஞ்சள் ஒட்டும் பொறியின் பயன்பாட்டினை விளக்கினர்.

# சிறுதானியங்கள் சாகுபடி மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த தொழில்நுட்ப பயிற்சி

அரியலூர், ஆக.5

அரியலூர் மாவட்டம், திருமானூர் வட்டாரத்தில், ஆங்கியனூர் மற்றும் கொரத்தாக்குடி கிராமங்களில் சிறுதானிய சாகுபடி மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த தொழில்நுட்ப பயிற்சி வேளாண்மை துறையின் மூலம் செயல்படும் அட்மா திட்டத்தின் கீழ் நடைபெற்றது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் திருமலை வாசன் சிறு தானியங்களில் மக்காச்சோளம், கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய பயிர்களில் சாகுபடி முறைகளான விதை ரக தேர்வு, விதை அளவு, விதை நேர்த்தி, பயிர் இடைவெளி, உர மேலாண்மை தொழில்நுட்பம் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகம், வறட்சி மேலாண்மைகள் மற்றும் பயிர் வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் அதன் பயன்கள் றித்து விரிவாக எடுத்துரைத்தார். பண்ணைய சாகுபடி முறையில் விவசாயிகள் மானாவாரி பயிர் சாகுபடி மற்றும் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மண்புழு உரம் தயாரிப்பு முதலிய பல்வேறு முறைகளை ஒருங்கிணைந்து பின் பற்றுவதன் மூலம் கூடுதல் லாபம் அடைய இயலும் என்பதையும் விளக்கினார். உதவி வேளாண்மை அலுவலர் சிவரஞ்சனி, வேளாண்மை துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் பல்வேறு இடுபொருட்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். பயிற்சியில் அட்மா திட்ட பணியாளர்கள் கலைமதி, சுந்தரமூர்த்தி, வாசுகி ஆகியோர் பயிற்சிக்கு ஏற்பாடு செய்து நடத்தினர்.

# விவசாயிகளை தேடி இப்கோ கிசான் ட்ரோன்

இப்கோ நானோ யூரியா (20% தழைச்சத்து), நானோ டி.ஏ.பி.(8% தழைச்சத்து மற்றும் 16% மணிச்சத்து) மற்றும் சாகரிகா திரவ உரங்கள் பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்தி மகசூலை அதிகரிக்கும். மேலும் திரவ உரங்களை குருணை உரங்களுக்கு மாற்றாக இலைவழியாக தெளிப்பதன் மூலம் விவசாயிகளின் இடுபொருள் செலவு குறைந்து வருமானம் அதிகரிக்கும். நானோ உரங்களை பிற வேளாண் பூச்சிக்கொல்லிகளுடன் கலந்தும் தெளிக்கலாம்.

**ட்ரோன் தெளிப்பான் மூலம் நானோ உரங்களை பயன்படுத்தும் முறை**

10 -12 லிட்டர் டேங்கிற்கு 250-500 மி.லி. நானோ திரவ உரங்களுடன், சாகரிகா முற்றிலும் நீரில் கரையக்கூடிய உரங்கள், வேளாண் பூச்சிகொல்லி மருந்துகளும் கலந்து பயன்படுத்தலாம். (ஒரு ஏக்கருக்கு 1 டேங்க் போதுமானது).

விவசாயிகள் குறைந்த செலவில் ட்ரோன் சேவையை பெற இப்கோ கிசான் உதய் செயலில் முன்பதிவு செய்யலாம்.

- ADVT.



# கிராமப்புற மகளிரின் வாழ்வாதாரத்தை காக்க உதவும் வேப்பம் பழம்



என்ன எங்க பார்த்தாலும் வேப்ப மரத்தில் வேப்பம் பழம் பழுத்து தொங்கி கொண்டு இருக்கும் அழகே கொள்ளை அழகுயாகும். தற்போது வேப்பம் பழம் சீசன் உச்ச கட்ட மாகும். வேப்பம் மரத்திற்கும் ஆடி மாதத்திற்கும் நெருங்கிய தொடர்பு அம்பாளின் அருள்வடிவமாக வேப்ப மரத்தை இன்றும் கிராமப்புறங்களில் பார்க்கின்றனர்.

### எப்போது காய்க்கும் தெரியுமா?

ஜனவரி – பிப்ரவரியில் பூ பூத்து மே – ஜூன் மாதங்களில் காயாக மாறி ஜூலை – ஆகஸ்டில் பழமாக மாறி விடும் வேப்பம் பழங்கள்.

### வேப்ப பழங்களை சாப்பிடலாமா?

வேப்ப பழங்களை அனைவரும் விரும்பி சாப்பிடுவதில்லை. பழம் இனிப்பு கலந்த கசப்பாக இருக்கும். காக்கை, குருவி போன்ற பறவைகளுக்கு உணவாக அமையும். நன்கு பழுத்து மரத்திலிருந்து தானாக கிழே விழும் பழங்கள் நன்றாக இனிக்கும். இன்றளவும் கிராமப்புறங்களில் வயதான முதியவர் களுக்கு கணிசமான வருமானத்தையும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை காக்க உதவுகிறது. தோலுடன் பழத்தை விற்பனை செய்தால் கிலோ 60 என்றும் பழத்தை நன்றாக கழவி அதனுடைய விதை (வேப்பம் முத்தை) விற்பனை செய்தால் கிலோ 100 வரை விற்பனை செய்ய முடியும். கிராமப்புறங்களில் வேன்களில் கூவி கூவி வேப்ப முத்தை வாங்கிட வியாபாரிகள் வரிசை கட்டி வருகின்றனர். இது வயதான பாட்டிகளின் செலவினங்களுக்கு உதவும் சுருக்கு பை பணமாக உள்ளன.

### வேப்பம் பழத்தின் தன்மைகள்

பழுத்த வேப்பம் பழம் 24% சதைப்பற்றுள்ளது. அதில் 47% கூழாகவும், 19% தடிமனான கொட்டைபகுதியுடன் 10% விதை முத்து உள்ளது.

பொதுவாக வேப்ப மரங்களில் கிராமப்புறங்களில் விவசாயிகளின் நிலங்களில், கோவில் பொது சாவடி மடங்களில் உள்ளது. வேப்ப மரத்தின் நன்மைகளை உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து வருகிறது. அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகள் இது குறித்து ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றனர். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் கிட்டதட்ட 35 லட்சம் டன் வேப்பங் கொட்டை பெறப்படுகிறது. இதைக் கொண்டு சுமாராக 7 லட்சம் டன் வேப்ப எண்ணெய் தயாரிக்க முடியும்.

**வேளாண்மையில் வேப்பங்கொட்டையின் பங்கு**

1) பூச்சி கொல்லி மருந்தாக வேப்பங்கொட்டை கரைசல் (NEEM SEED KERNAL) அனைத்து பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த உதவுகின்றன.

2) மக்காசோளம் படைப்புழு (FALL ARMY WARM) பருத்தி தண்டுக்கூண் வண்டு (STEM WEEVILS) போன்றவற்றை கட்டுப் படுத்த ஏக்கருக்கு அடியுரமாக 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு பயன்படுத்தலாம்.

3) தென்னை மரங்களில் சிவப்பு கூண் வண்டு தாக்குதலை தடுக்க ஒரு மரத்திற்கு 5 கிலோ வரை இடலாம்.

4) தானிய சேமிப்பிற்கு வேப்பங்கொட்டைத்தூளை பயன் படுத்தலாம்.

5) மழைக்கால ங்களில் யூரியா மேலுரமிடும் போது 5:4:1 என்ற அளவில் யூரியா வேப்பம்புண்ணாக்கு ஜிப்சம் கலந்து இட்டால் பயிருக்கு இடப்படும் உரமானது எளிதில் ஆவியகாது (SLOW RE-LEASE) உரம் பயிருக்கு கிடைக்கும்.

**மனித ஆரோக்கியத்திற்கு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?**

1) சொறி சிரங்குகிற்கு அருமருந்தாக உள்ளது.

2) பூச்சிக்கடிக்கு (வயிற்றில் புழு) நல்ல மருந்தாக பயன் படுத்தலாம்.

3) பித்த நோய்க்கு மருந்தாக பயன்படுத்தலாம்.

விபரபமறிந்த விவசாயிகள் தங்களுடைய தேவைக்கு கிராமப் புறங்களில் வேப்ப முத்தை வாங்கி நிலத்தில் பயன்படுத்திட தயாராக உள்ளனர். வேப்பம் மரத்தின் அனைத்து பாகங்களும் மருத்துவ குணமுள்ளது. விவசாயத்திற்கு அடிப்படையான பூச்சிகளை கட்டுப்படுத்தும் மருந்தாக உள்ளது. அதுமட்டுமல்ல கிராமப் புற மகளிருக்கான வாழ்வாதாரத்தை காக்கும் அருமருந்தாக உள்ளது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தென்னை நார்பித் பற்றிய தகவல்கள்

தஞ்சாவூர், ஆக.5

கிராமப்புறங்களின்அனைத்து திசைகளிலும் நான்கு ஐந்து தென்னைமரமாவது இருப்பது இயல்பு. தென்னை மரத்தின் பயன்கள் பல. பொதுவாக பயனறியாது தூக்கி எறியப்படும் பொருள்களில் ஒன்றாக கருதப்படுவது தென்னை நார், தென்னை நார் கொண்டு நார்பித் தயாரிப்பதன் மூலம் மண்ணை வளமாக்கும் பொருளாகவும் மேலும் வருமானம் ஈட்டித் தரும் பொருளாகவும் மாற்ற முடியும்.

**தென்னை நார்பித் என்றால் என்ன?**

தென்னை நார்பித் (Coconut Coir Pith) என்பது தென்னை மரத்தின் கொய்யாவில் இருந்து கிடைக்கும் ஒரு தானியமாகும். தென்னை நார்பித்தில் முக்கியமாக இரண்டுபகுதிகள் உள்ளன. நார் மற்றும் பித். நார்பித் என்பது தென்னை கொய்யாவின் இடையே உள்ள மென்மையான மற்றும் சூழலில் உள்ள பொருளாகும்.

**வீட்டில் தென்னை நார்பித் தயாரித்தல்**

1. தேங்காய் மட்டைகளைச் சேகரித்து 2-3 நாட்கள் தண்ணீரில் ஊற வைக்கவும்.

2. உமிகளை வடிகட்டவும். பின்னர் அவற்றை வெயிலில் அல்லது இயந்திரத்தைப் பயன்படுத்தி உலர வைக்கவும்.

3. காய்ந்ததும், உமியை நன்றாகப் பொடியாக அரைத்துக் கொள்ளவும்.

4. ஏதேனும் கட்டிகள் அல்லது பெரிய துகள்களை அகற்ற தூள் சல்லடை பயன்படுத்தலாம்.

5. தென்னை நார்க்கழிவை காற்றுப் புகாத டப்பாக்களில் சேமித்துத் தேவைக்கேற்ப பயன்படுத்தலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

**பயன்கள்**

1. **இயற்கையானது மற்றும் நிலையானது :** தென்னை நார்பித் ஒரு மக்கும் மற்றும் புதுப்பிக்கத்தக்க வளமாகும்.

2. **மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துகிறது :** தென்னை நார்ச்சத்து மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனையும் காற்றோட் டத்தையும் அதிகரிக்கிறது.

3. **ஆரோக்கியமான வேர் வளர்ச்சியை ஆதரிக்கிறது :** தென்னை நார்பித்தில் அதிக லிக்னினின் உள்ளடக்கம் ஆரோக்கியமான வேர் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

4. **சுற்றுச்சூழலுக்கு உகந்தது :** தென்னை மட்டையை பயன்படுத்துவதால் ஏற்படும் கழிவுப்பொருளாக தென்னை நார்பித் உள்ளது. இது கழிவுகளை அகற்றுவதில் உள்ள சிக்கல்களைக் குறைக்கிறது.

5. **செலவு குறைந்தவை :** கரி, பாசி மற்றும் பிற வளரும் ஊடகங்களுக்கு தேங்காய்பித் ஒரு மலிவான மாற்றமாகும்.

**சந்தைப்படுத்துதலின் உத்திகள்**

1. **இணையவழி இருப்பு :** தயாரிப்புகளைக் காட்சிப்படுத்த மற்றும் பரந்த பார்வையாளர்களைச் சென்றடைய சமூக ஊடக கணக்குகள் அல்லது இணையதளத்தை உருவாக்கலாம்.

2. **உள்ளூர் நர்சரிகள் மற்றும் தோட்டக்கலை கடைகள் :** உள்ளூர் நர்சரிகள் மற்றும் தோட்டக்கலை கடைகளுக்குத் தென்னை நார்பித் வழங்கலாம்.

3. **உழவர் சந்தைகள் :** உழவர் சந்தைகளில் வாடிக்கையாளர் களுக்கு நேரடியாகத் தேங்காய் துருவல் விற்கலாம்.

4. **தோட்டக்கலை நிபுணர்களுடன் கூட்டாளர் :** தோட்டக்கலை நிபுணர்கள் ஒத்துழைப்புடன் தென்னை நார்க்கழிவை இயற்கை யான மற்றும் நிலையான வளரும் ஊடகமாக ஊக்குவிக்கலாம்.

5. **லேபிளிங் மற்றும் சான்றிதழ் :** இயற்கை தோட்டக் காரர்களை ஈர்க்க OMRI (Organic Materials Review Institute) போன்ற சான்றிதழ்களைப் பெறுவதைக் கருத்தில் கொள்வது நல்லது.

தகவல் : **செ.ஆர்த்தி, இறுதி ஆண்டு மாணவி, ஆர்.வி.எஸ் வேளாண்மை கல்லூரி, தஞ்சாவூர்.**

# பயிர்களை பாதிக்கும் வேர் அழுகல் நோய் - ஒருங்கிணைந்த நோய் நிர்வாக முறைகள்!

வேர் அழுகல் நோய் மண்ணில் வாழும் பூஞ்சாணங்களாக பியூசேரியம், ஸ்கீலீரோஷியம், பித்தியம் மற்றும் மேக்ரோ போமினா பேசியோலினா போன்றவைகளால் ஏற்படுகின்றது.




## உகந்த சூழ்நிலைகள் மற்றும் பரவும் விதம்

மண்ணில் அதிகமாக நீர்ப்பாச்சுதல் மற்றும் மண்ணில் நீர் தேங்கி நிற்றல் இதுபோன்ற காரணிகள் வேருக்கு கிடைக்கக் கூடிய பிராண வாயுவை தடுக்கின்றன. இதனால் வேர்கள் மிகவும் வலுவிழந்து போகின்றன இவ்வாறு விலுவிழந்து போகும் வேர்கள் உடனடியான பூஞ்சாண தாக்குதலுக்கு உள்ளாகின்றன. இந்த ஈரமும் வெப்பமும் சேர்ந்து உண்டாக்கும் ஒரு குழ்நிலை இந்த நோய்க் காரணி வாழ்வதற்கு சாதகமாக உள்ளது வளரும் களைச் செடிகள் இந்த நோய்க்காரணிக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கின்றன.

## நோயின் அறிகுறிகள்

நோய்க் காரணிகள் மண்ணில் உருவாக்கும் ஸ்கிலிரோஷியம் மற்றும் கிளாமிடோஸ்போர் போன்றவைகளால் வேர்கள் கடுமை யாக பாதிப்படைகின்றன. இந்த சிதைவடைந்த பகுதிகள் பயிர்களில் நீர் மற்றும் ஊட்டச்சத்துக்கள் கடத்தப்படுவதை தடுப்பதால் பயிரில் வளர்ச்சி குன்றி காணப்படும். மேலும் வேர் முடிகள் முற்றிலும் அழித்து விடுவதால் வேர்களில் உறிஞ்சும் தன்மை பாதிக்கப்படுகிறது.

ஆணி வேரின் பக்க வேர்கள் பாதிக்கப்படுவதால் ஆணி வேர் தனது பிடிப்புத் தன்மை இழந்து வேர்கள் வலுவிழந்து போகின்றன. இதன் காரணமாக பாதிக்கப்பட்ட செடிகளை மிக எளிதாக பிடுங்க முடிகிறது. வேர் அழுகலால் பாதிக்கப்பட்ட செடிகள் உடனடியாகவோ அல்லது மெதுவாகவோ முழுவதும் இறந்து போகின்றன.

கிளைகள் மேலிருந்து ஒவ்வொன்றாக இறந்து போகின்றன. இதனால் செடிகளின் அடர்த்தி தன்மை குறைந்து மெலிந்து காணப்படுகின்றது. பாதிக்கப்பட்ட வேர்கள் பழுப்பு நிறம் அல்லது கருமை நிறத்தில் மிகவும் மென்மையாகவும் சிதைவடைந்த தாகவும் தென்படுகின்றன.

வேரிலிருந்து தண்டை நோக்கி தாக்கி வரும் பூஞ்சாணங்கள் விரைவில் வேர்ப்பகுதியில் உட்புறத்திலும் பரவி இறந்த செல்களை தோற்றுவிக்கின்றன. வேர்ப்பகுதி சிதைக்கப்படு வதால் இதன் மேற்புறம் உள்ள தண்டு பகுதியில் இலைகள் தங்களது பச்சையத்தை இழந்து, மஞ்சளாசி பழுப்படைகின்றன.

மேலும் மஞ்சள் அல்லது பழுப்பு நிறத்தில் மாறிய இலைகள் வாடி வதங்கி விடுகின்றன.பாதிக்கப்பட்ட செடிகளில் உள்ள இலைகள் சிறுத்தும் வெளிறிப் போன நிறத்திலும் காணப்படுகின்றன. மேலும் முற்றிலும் பாதிக்கப்பட்ட இலைகள் விரைவில் உதிர்ந்து விடுகின்றன.

**நோய் நிர்வாகம்**

விதைத்தேர்வு மிகவும் அவசியமாகும். நோய் தாங்கும் திறன் உள்ள நகங்களை தேர்வு செய்தல் முக்கியம். சேதமுற்ற விதைகளை விதைப்பதற்கு பயன்படுத்தக் கூடாது.

விதைகளை விதைப்பதற்கு முன் ட்ரைகோடெர்மா விரிடி அல்லது ட்ரைகோடெர்மா ஹார்சியானம் போன்ற பூஞ்சாண உயிர் கொல்லி களோடு ஒரு கிலோவிற்கு 4 கிராம் என்ற அளவில் அல்லது ஒரு கிலோவிற்கு இரண்டு கிராம் வீதம் கார்பன்டெசிம் பூஞ்சாணக் கொல்லி மூலம் விதை நேர்த்தி செய்வது அவசியம் நோய் பாதிக்கப்பட்ட செடிகளை உடனடியாக களைந்தெறிதல் வேண்டும்.

வரப்புகளை தூய்மையாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும். மேலும் களைச் செடிகளை அவ்வப்போது அகற்றுதல் வேண்டும். பயிர் சுழற்சி முறையை மேற்கொள்ளும் பொழுது இந்த நோயின் தீவிர தாக்குதலை நாம் குறைக்க முடியும்.

சுத்தமான பாசனக் கால்வாய் மற்றும் வரப்புகள் அமைத்தல் வேண்டும். அதிகபடியான நீர் தேக்கி வைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

அதிக இடைவெளியோடு செடிகள் நடப்படும் பொழுதும் இந்த நோயின் தீவிரப் பரவுதல் குறையும். அதிக நைட்ரஜன் உரங்களை பயன்படுத்துவது நோயின் தீவிரத்தை அதிகரிக்கும்.

நோய் நிர்வாகத்திற்கு மண்ணில் கரிமபொருட்கள் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டும்.

தொழுஉரம் இரண்டு டன்னுடன் வேப்பம் புண்ணாக்கு ஒரு ஏக்கருக்கு 60 கிலோ என்ற அளவில் கலந்து கொடுக்கலாம்.

ட்ரைகோடெர்மா விரிடி அல்லது ட்ரைகோடெர்மா ஹார்சியானம் போன்ற பூஞ்சாண உயிர் கொல்லிகளை 1 கிலோ/ ஏக்கர் மண்ணில் சேர்க்க வேண்டும்.

நோய் கண்ட செடிகளின் வேர்களில் காப்பர் ஆக்சி குளோரைடு 2.5 கிராம்/லிட்டர் (அ) டைஃபெங்கோணசோல் 0.5 கிராம்/லிட்டர் (அ) டிரைஃப்ளாக்சிஸ்ட்ரோபின் + டெபுகோனோ சோல் 0.75 கிராம்/ லிட்டர் பயன்படுத்தி மண் நனைத்தல் வேண்டும் என சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் தெரிவித்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# e-Nam திட்டத்தின் நன்மைகள்

1. மறைமுக ஏலம் வாயிலாக வர்த்தகம் நடைபெறுவதால் நியாயமான போட்டிவிலை கிடைப்பதை உறுதி செய்யப்படுகிறது.

2. போட்டி அதிகரிப்பதால் விளைபொருள்களுக்கான உரிய விலை கிடைக்கப்பெறுகிறது.

3. விளைபொருள்கள் தர நிர்ணயம் செய்யப்படுகிறது. இதனால் கூடுதல் விலை கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

4. விவசாயிகளுக்கு விளைபொருளின் கிரையத் தொகை நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப் படுகிறது. இதனால் தரகு, கமிசன், மகிமைபிடித்தம் இன்றி முழுத் தொகையும் அவர்களுக்கு கிடைக்கிறது.

5. விவாயிகளின் நேரம் சேமிக்கப்படுகிறது.

6. விளைபொருள்களுக்கான விலை விவரம் விவசாயிகளின் அலைபேசிக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்படுகிறது.

7. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட விளைபொருள்கள் அவற்றின் அன்றாட விலை பட்டியலுடன் வாட்ஸ்அப் தொழில்நுட்ப செய்திகளாகவும். குரல் செய்தித்காகவும் உழவர் செயலியில் அனுப்பப்பட்டு வருகிறது.

8. பண்ணை வாயில் வர்த்தகத்தின் வாயிலாக விவசாயி களின் இருப்பிடத்திற்கே நேரடியாக சென்று விளைபொருள் கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகளுக்கு போக்குவரத்து செலவினம், ஏற்றுக் கூலி, இறக்குக்கூலி மற்றும் விளை பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கப்பெறுகிறது.

9. அறுவடைக் காலங்களில் விளைபொருள்களின் அதிக வரத்து காரணமாக ஏற்படும் விலை வீழ்ச்சியினை தவிர்க்க, விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் இருப்பு வைத்து விளைபொருள்களின் மதிப்பில் 75 சதவீதம் வரை அதிகபட்சமாக ரூ. 5 இலட்சம் வரை பொருளீட்டுக்கடன் பெற்றுப் பயனடையலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி ஒரு அறிக்கையில் கேட்டு கொண்டுள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# இயற்கை வேளாண்மை/அங்கக வேளாண் இடுபொருட்கள் தயாரித்தல் குறித்த பயிற்சி

ஈரோடு, ஆக.5



ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டாரத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் இயற்கை வேளாண்மை / அங்கக வேளாண் இடுபொருட்கள் தயாரித்தல் பயிற்சி தாசரிபாளையம் கிராமத்தில் 5.8.24 அன்று கு.கற்பகம், வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தலைமையில் நடைபெற்றது.




ப.உமா மகேஸ், வேளாண்மை அலுவலர், மத்திய மற்றும் மாநில திட்டங்கள் மற்றும் உயிர் உரங்கள் உபயோகிக்கும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவித்தார். சங்கீதா, உதவி பேராசிரியர் JKK கல்லூரி, அங்கக வேளாண்மை செய்வதற்கான வழிமுறைகள் பயிர் சுழற்சி மற்றும் அங்கக இடுபொருள் தயாரிக்கும் முறைகள் (பஞ்சகாவ்யா, அமிர்தகரைசல், ஜீவாமிர்தம் மற்றும் பூச்சிவிரட்டி) பூச்சி மேலாண்மை, களை மேலாண்மை குறித்து விவசாயி களிடம் கூறினார். சத்தியமங்கலம் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக், உழவன் செயலி பதிவேற்றம் மற்றும் இ வாடகை குறித்து விவசாயிகளிடம் கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை சத்தியமங்கலம் உதவி தொழில்நுட்ப மலாளர்கள் த.நந்தினி மற்றும் அ.வீரமணி ஆகியோர் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# மக்கிய தென்னை நார்க்கழிவின் பயன்கள்

● மட்கிய நார்க்கழிவினை மண்ணில் சேர்ப்பதால், மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள் மற்றும் உழவு ஆகியவை மேம்படுகின்றன. இது மணற்பாங்கான மண்ணின் கடினத்தன்மையை அதிகப்படுத்துகிறது மற்றும் களிமண்ணை காற்றோட்டம் உள்ளதாக ஆக்குகின்றது.

● மண் துகள்களை ஒன்று சேர்த்து மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துகிறது.

● நீரை தக்க வைத்துக்கொள்ளும் தன்மையை அதிகப் படுத்தி, மண்ணின் ஈரப்பதத்தை அதிகப்படுத்துகிறது.

● இதனை பயன்படுத்துவதால் மேல் (10-15 செ.மீ) மற்றும் அடி (15-30 செ.மீ) மண்ணின் அடர்த்தி குறைகிறது.

● மட்கிய உரமாதலால், இது நன்மை பயக்கும்மண்வாழ் நுண்ணுயிரிகளை அதிகப்படுத்துகிறது.

● அம்மோனியமாக்கல், நைட்ரேட் மற்றும் நைட்ரஜன் நிலைநிறுத்தல் ஆகிய வினைகள் இதிலுள்ள நுண்ணுயிரின் செயல்திறனால் அதிகரிக்கிறது.

**பயன்பாடுகள்**

● எல்லா வகைப் பயிர்களுக்கும் எக்டருக்கு 5 டன் அளவில் இடவேண்டும்.

● இதனை விதைப்பதற்கு முன் அடி உரமாக இடவேண்டும். நாற்றாங்கால்களுக்கு, பாலித்தீன் பைகள் மற்றும் மண் தொட்டிகளில் நிரப்ப வேண்டிய மண் கலவைகளுக்கு 20 சதவீதம் மட்கிய நார்கழிவானது மணலுடன் கலக்கப்பட்டு தயாரிக்கப்படுகிறது.

● தென்னை,மா,வாழை மற்றும் பழமரங்கள் போன்ற நன்கு வளர்ந்த மரங்களுக்கு வருடத்திற்கு குறைந்த அளவு 5 கிலோ/ மரத்துக்கு போதுமானது என சேலம் மாவட்டம், கொளத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் ந.இராஜகோபால் தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# உயிர்ம வேளாண்மையில் மண்வளத்தை அதிகரிப்பதற்கான தொழில்நுட்பங்கள்

இயற்கை முறையில் மண்வளத்தை அதிகரிக்க மண்ணின் கரிமச்சத்து அல்லது மக்குப்பொருளின் அளவை அதிகரிக்க வேண்டும். மண்ணின் மக்குப் பொருளின் அளவை அதிகரிக்கப் பின்வரும் தொழில்நுட்பங்களைப் பின்பற்ற வேண்டும்.

**இயற்கை உரங்கள் பயன்படுத்துதல்**

இயற்கை உரங்களை முடிந்தவரை அடியுரமாகப் பயன்படுத்துவது




சிறந்தது. இதனைக் கடைசி உழவின் பொழுது மண்ணில் இட்டு மண்ணுடன் நன்கு கலந்த பிறகு பயிர் சாகுபடி செய்வதன் மூலம் நல்ல பலனைப் பெற இயலும்.

**தொழுஉரம் பயன்படுத்துதல்**

கால்நடைகளிலிருந்து குறிப்பாக மாட்டுக் கொட்டகையிலிருந்து பெறப்படும் சாணம், கோமியம் மற்றும் அவற்றின் எஞ்சிய தீவனங்களின் பகுதிகளைச் சேகரித்துக் குவியல் அல்லது குழி–முறையில் மக்கச் செய்யும் பொழுது கிடைப்பது தொழு உரமாகும். நன்கு மக்கிய தொழுஉரத்தில் 0.5 சதவிகிதம் தழைச்சத்தும், 0.3 சதவிகிதம் மணிச்சத்தும் மற்றும் 0.5 சதவிகிதம் சாம்பல் சத்தும் இருக்கும். பயிர் சாகுபடியில் நன்கு மக்கிய தொழு உரத்தைப் பயன்படுத்த வேண்டும். மக்காத மற்றும் பாதியளவு மக்கிய தொழு உரங்களைப் பயிருக்கு வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன் களைகள் மற்றும் பூச்சி நோய்த் தாக்குதலும் அதிகளவில் தென்படும்.

**தாவரப் புண்ணாக்குகள் இடுதல்**

எண்ணெய் வித்துப்பயிர்களான கடலை, தேங்காய், எள், கடுகு, வேம்பு புங்கம் ஆகியவற்றின் விதைகளிலிருந்து எண்ணெயைப் பிழிந்து எடுத்த பிறகு கிடைக்கும் எஞ்சிய பகுதிகள் புண்ணாக்குகள் ஆகும். தழைச்சத்து (2.5 – 6.5 சதவிகிதம்), குறிப்பிடத்தக்களவில் மணி (1.1 –3.2 சதவிகிதம்), சாம்பல் (1.3 – 2.2 சதவிகிதம்) சத்துக் களும், நுண்ணூட்டச் சத்துக்களும் இருக்கும். இந்தத் தாவர புண்ணாக்குகள் மண்ணில் இட்ட பிறகு நைட்ரேட்டாக மாறி பயிர்களுக்குத் தழைச்சத்தை மெதுவாக வெளியிட்டுப் பல நாட்களுக்குப் பயிர்களுக்கு அளிக்கும். ஒரு ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கும் அதனுடன் சரிவிகிதத்தில் மற்ற புண்ணாக்குகளில் ஏதேனும் ஒன்றையும் சேர்த்து அடியுரமாக இடவேண்டும்.

**பயிர்க்கழிவுகளை மறுசுழற்சி செய்து மக்கு உரம் அல்லது கம்போஸ்ட் உரம் தயாரித்து இடுதல்**

மக்கக் கூடிய அனைத்து வகைப் பயிர்க் கழிவுகளையும் சேகரித்து நுண்ணுயிரிகளைக் கொண்டு பாதுகாப்பான சூழலில் மக்க வைத்து அதன் மூலம் கிடைக்கக் கூடிய பொருளை மக்கு உரம் அல்லது கம்போஸ்ட் என்றழைக்கப்படும். மக்கு உரத்தில் உள்ள ஊட்டச் சத்துக்களின் அளவு நாம் பயன்படுத்தக்கூடிய பயிர்க் கழிவுப் பொருட்களுக்கு ஏற்ப மாறுபடும். மக்கு உரத்தை அனைத்து வகைப் பயிர்களுக்கும் ஒரு ஏக்கருக்கு 2 டன் என்றளவில் பயிர் செய் வதற்கு முன்பு அடியுரமாக இடவேண்டும்.

மண்புழு உரம் இடுதல்

மண்புழு உரத்தில் பயிர்களுக்குத் தேவையான பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் பயிர்கள் எளிதில் எடுத்துக் கொள்ளும் வடிவத்தில் இருக்கும். எனவே மக்கக்கூடிய கழிவுகளைச் சேகரித்து மண்புழுக்களைப் பயன்படுத்தி மண்புழு உரம் தயாரித்து ஏக்கருக்கு 2 டன் என்றளவில் பயன்படுத்துவதன் வாயிலாக மண் வளத்தைப் பராமரிப்பதுடன் பயிரின் விளைச்சலையும் அதிகரிக்கலாம்.

**பசுந்தாள் உரமிடுதல்**

பசுந்தாள் உரப்பயிர்களை (சணப்பு, தக்கைப்பூண்டு, சீமை அகத்தி, தட்டைப்பயறு, பில்லிப்பயறு) பயிரிட்டு குறிப்பிட்ட காலத் திற்கு அதாவது பூப்பூக்கும் பருவம் வரை வளரவிட்டு, மண்ணில் மடக்கி உழவு செய்வது பசுந்தாள் உரமிடுதல் ஆகும். பசுந்தாள் உரப்பயிர்கள் பயறுவகைப் பயிர்கள் குடும்பத்தைச் (பேபேசி) சார்ந்தவையாகும். இவை ரைசோபியம் பாக்டீரியாவின் உதவியுடன் காற்றிலுள்ள தழைச்சத்தை வேர்முடிச்சுகளில் சேமிக்கின்றன. அவற்றை மண்ணுக்குள் மடக்கி உழுவதால் ஒரு ஏக்கர் நிலப் பரப்பில் 16-32 கிலோ தழைச்சத்துக் கிடைக்கிறது. தழைச்சத்து மட்டுமல்லாமல் நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் அங்ககக் கரிமச்சத்தையும் மண்ணுக்கு அளிக்கிறது. பசுந்தாள் உரப் பயிர்களைப் பயன்படுத்த முடியாத சூழலில் பசுந்தழை உரப் பயிர்களான புங்கம், வேம்பு ஆகியவற்றின் இலைகளைச் சேகரித்து மண்ணில் இட்டு மடக்கி உழவு செய்வதன் மூலம் மண்வளத்தை அதிகரிக்கச் செய்யலாம்.

**நுண்ணுயிர் உரங்கள் பயன்படுத்துதல்**

நுண்ணுயிர் உரங்கள் இயற்கையாகவே நமது பயிரோடு இணைந்தும் அல்லது பயிரின் வேர்ப்பகுதியைச் சுற்றியும் வாழ்ந்து கொண்டிருக்கும் நுண்ணுயிரிகள் ஆகும். இந்த நுண்ணுயிரிகள் மண்ணில் பயிர்களுக்குக் கிடைக்காத நிலையிலிருக்கும் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களைப் பயிர்கள் எடுத்துக்கொள்ளும் வடிவத்தில் மாற்றிக் கொடுக்கின்றன. மேலும், இவை அமினோ அமிலங்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகளை உற்பத்தி செய்வதன் வாயிலாகப் பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. தழைச்சத்தை நிலைநிறுத்தும் நுண்ணுயிர் உரங்கள் (அசோஸ்பைரில்லம், ரைசோபியம், அசட்டோபேக்டர், குளுக்கான் அசிட்டோபாக்டர், நீலப் பச்சைப்பாசி மற்றும் அசோலா) மற்றும் மணிச்சத்தைக் கரைத்துப் பயிருக்கு அளிக்கும் நுண்ணுயிர் உரங்கள் (பாஸ்போபாக்டீரியா, பேசில்லஸ் வகை பாக்டீரியாக்கள்) ஆகியவற்றை சாகுபடி செய்யும் பயிருக்கு ஏற்றவாறு தேர்வு செய்து மண்ணில் இடுவதன் மூலம் மண்வளத்தை அதிகரிக்கலாம்.

## இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்துதல்

இயற்கை இடுபொருட்களான ஜீவாமிர்தக் கரைசல் மற்றும் ஹுயூமிக் அமிலம் போன்றவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் மண்வளத்தையும், பயிரின் வளர்ச்சியையும் அதிகரிக்கச் செய்யலாம். ஒரு ஏக்கர் நிலப்பரப்பிற்கு 200 லிட்டர் ஜீவாமிர்தக் கரைசல் போதுமானதாகும். ஜீவாமிர்தக் கரைசலை நீர்ப்பாய்ச்சும் பொழுது பாசன நீருடன் கலந்து நீர்ப்பாசனம் செய்யலாம்.

## பயிர் சுழற்சி முறை

வெவ்வேறு விதமான வேரமைப்புக் கொண்ட பல்வேறு வகையான பயிர்களை மண்ணில் குறைந்தளவு இடையூறு ஏற்படுத்திச் சாகுபடி செய்வதன் மூலம் மண்ணில் அதிகளவு துளைகள் கொண்ட மற்றும் வேர்கள் அடங்கிய வலையமைப்பை உருவாக்க இயலும். பயறுவகைப் பயிர்களைப் பயிர் சுழற்சி முறையில் சாகுபடி செய்யும் பொழுது அவை மண்ணில் தழைச் சத்தை நிலை நிறுத்துவதன் மூலம் மண்ணில் ஊட்டச்சத்துக்களின் அளவை அதிகரிக்கிறது.

## மூடாக்குப் பயிர்கள்

பயிர் சாகுபடியில் வரிசைகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் குறைந்த உயரம் கொண்ட பயிரின் ஆரம்பக் காலத்தில் வேகமாக வளரும் பயிர்களை மண்ணின் மேற்ப்பரப்பில் பரப்பச் செய்யும் வகையில் சாகுபடி செய்யக்கூடிய முறை மூடாக்குப் பயிர்கள் சாகுபடி ஆகும். பயறுவகைப் பயிர்களான காராமணி, கொள்ளு, பச்சைப்பயறு, உளுந்து மற்றும் சணப்பு ஆகியவற்றை மூடாக்குப் பயிர்காளகச் சாகுபடி செய்யலாம். கோடை காலத்தில் பயறுவகைப் பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம் அவை மண்ணின் மீது மூடாக்குப் போன்று செயல்பட்டு மண் அரிமானத்தையும், மண்ணிலிருந்து கரிமப்பொருள் விரயமாவதையும் தடுக்கிறது. மேலும், அவை மண்ணில் தழைச்சத்தை நிலை நிறுத்துவதன் மூலம் மண்ணில் ஊட்டச்சத்துக்கள் மற்றும் அங்ககப் பொருட்களின் அளவையும் அதிகரிக்கிறது என அயோத்தியாப்பட்டணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் த.சரஸ்வதி மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# பாரம்பரிய நெல் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி



சேலம், ஆக.5

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் வேளாண்மை துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் பாரம்பரிய நெல் சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி வரகூர் கிராம விவசாயி களுக்கு வழங்கப்பட்டது. வரகூர் கிராம தலைவர் ராமசாமி தலைமை தாங்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி வரவேற்று பேசினார். துணை வேளாண்மை அலுவலர் மணவழகன் பாரம் பரிய நெல் சாகு படியின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் பற்றி கூறினார். வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் மத்திய மாநில அரசு திட்டங்கள் பற்றி கூறினார். இயற்கை ஆர்வலர் வெங் கடாசலம் சீரக சம்பா, தூய மல்லி, சிவன் சம்பா போன்ற பாரம்பரிய நெல் ரகங்களை சாகுபடி செய்யும் முறை குறித்து கூறினார். மேலும் பஞ்சகாவியா, ஜீவாமிர்தம், மீன் அமிலம், இயற்கை பூச்சி விரட்டி ஆகியவற்றை எவ்வாறு தயாரிப்பது மற்றும் பயன்படுத்துவது பற்றி விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். உதவி தோட்டக்கலை அலுவலர் ராமு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். கிராம நிர்வாக அலுவலர் குமார் தங்கள் துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் பிரகாஷ் நுண்ணூட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் உயிர் உரங்களின் பயன்கள் குறித்தும் எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியும் விளக்கினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் முத்துவேல் நன்றி கூறினார். பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# மொடக்குறிச்சி வட்டாரத்தில் மண்புழு உரம் தயாரித்தல் குறித்த விவசாயிகள் பயிற்சி

ஈரோடு, ஆக.5

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரம் வேளாண்மை – உழவர் நலத்துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கான உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி மண்புழு உரம் தயாரித்தல் என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு வடுகபட்டி கிராமத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. சா.கலைச்செல்வி,வேளாண்மை உதவி இயக்குநர், மொடக்குறிச்சி துறை மானியத் திட்டங்கள் மற்றும் உயிர் உரங்கள் பயன்கள் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார்.

போஜராஜ், உதவி பேராசிரியர், மண்புழு உர பயன்கள், பயிர்களுக்குமண்புழு உர அளவு, மண்புழு உரத்தின் தரம் மற்றும் மண்புழு வளர்ப்பு முறைகள் குறித்து தெளிவாக விளக்கினார். நேரு மல்லிகா, முன்னோடி விவசாயி மண்புழு உரம் தயாரிக்கும் முறைகள், உரக்கூடம் மற்றும் மண்புழுஉரம் சேமிப்புமுறைகள் குறித்து விளக்கினார். பேபி பிரியா, தொகுப்பு ஒருங்கிணைப்பாளர், இயற்கை வேளாண்மை குறித்து கூறினார். சரண்யா மற்றும் கிருபாகரன் பயிர் காப்பீடு குறித்து கூறினார். த.விஜயகுமார் மற்றும் பொ.லட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# பூ பயிர்களில் மதிப்பு கூட்டுதல் பயன்பாடு பயிற்சி

சேலம், ஆக.5

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரம், மாரமங்கலம் பஞ்சாயத்து பெலாக்காடு கிராமத்தில் வேளாண்மை துறையின் கீழ் ஆத்மா திட்டத்தில் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குநர் தலைமையில் பூ பயிர்களில் மதிப்பு கூட்டுதல் பயன்பாடு என்னும் தலைப்பின் கீழ் 40 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் எவ்வாறு பூக்களை மதிப்பு கூட்டி வருமானம் ஈட்டலாம் என்பது பற்றி என் ஜி ஓ வை சேர்ந்த எடுத்துரைத்தார். மேலும் இப்பயிற்சியில் பூ சாகுபடி குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

பூப்பயிரில் களை மேலாண்மை பூச்சி மேலாண்மை ஊடுபயிர் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு காணொளி மூலமாக ஊதுபத்தி தயாரிப்பது வாசனை திரவியங்கள் தயாரிப்பது அழகு தாவரங்கள் பயன்படுத்தும் முறை போன்ற கைவினை தொழில் நுட்பங்களும் வழங்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மதிய உணவு மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் ஆத்மா சேர்மன் தங்கசாமி தலைமை உரை ஆற்றினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் துரையரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்